தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 15.] MADRAS:—SUNDAY APRIL, 10, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

அபிப்பிராய பேதம.	நாஸ்திகமெது.
வியவசாயரசாயனம்.	கடிதம்.
கடைதிறப்பு.	வர்த்தமானசங்கிரகம்.
சுண்ணிகள்.	நோட்டீஸ்.

ராஜா ஸர். டி. மாதவராவ் K. C. S. I. அவர்களால் கன்வோகேஷனில் வாசிக்கப்பட்ட உபந்நியாசத்தின் பாகம்.

அபிப்பிராயபேதம்.

அடிக்கடி அபிப்பிராயத்தில் வேறுபடுவது சுதேசிகளுடைய தன்மையாயிருப்பதால் துக்குடிதுக்குடியாகப் பிரிந்துபோகிறார்கள். இதனாலே, பலவகைப்பட்ட உயர்வுதாழ்வான அறிவினளவும், தீர்மானிப்பதற்கு ஏற்றத்தாழ்வான பலவித சக்தியும், நானாவிதமான பற்றும், குணகுணங்களும், பிடிவாதமும், சரி-தப்பு என்பதற்குரிய பிரமாணங்களுக்கு மிஞ்சின பல பிரமாணங்களும் பரவுவதாக விளங்குகிறது. பாருங்கள், அபிப்பிராயங்கள் எவ்வளவு வேறுபடுகின்றனவோ அவ்வளவு சனப்பிரிவுகளு முண்டாகு மென்று தெரிந்துகொள்ளவேண்டும்; அதினாலே பலவீன முண்டாகவேண்டியதுதான். கல்வி விர்த்தியாக ஆக வேறுபடுதலும் குறையும்; விர்த்தி வளரவளர ஐக்கியபத்தியமும் வளருமென்று கோரத் தக்கதே. ஒவ்வொரு கல்விமானும் தன்தன் கொள்கையை ஆராய்ந்துபார்ப்பதற்கும், தன்தன் கொளகை குறைவறவிருக்கிறதாவென்றும், தன்தன் நியாயம் உறுதியாயிருக்கிறதாவென்றும் யோசித்தறிவதற்கும், முடிவாய் சரியான தீர்மானத்திற்கு வருவதற்கும் முயற்சி செய்யக்கடவர். உடனே ஒத்துக்கொண்டால், புத்தியீனத்தால் ஒத்துக்கொண்டதாய் நினைப்பார்களென்கிற துரபிப்பிராயத்தினாலாவது, ஒத்துக்கொள்ளாவிட்டால் புத்தி விசேஷத்தால் ஒத்துக்கொள்ளவில்லையென்று நினைப்பார்களென்கிற துரபிப்பிராயத்தினாலாவது வேறுபடலாகாது. ஆலோசனையும் அனுபவமுமுள்ள அநேகர் ஒரு அபிப்பிராயத்தில் கலக்கும்போது, அதினின்றும் வேறுபடுவதற்கு அவசரப்படலாகாது. வேறுபடுவதைப்பார்க்கினும் ஒத்துக்கொள்வதே விசேஷம். பேசுவதற்காவது வாதிக்குஞ் சாமர்த்தியத்தைக் காட்டவாவது இது சமயமெனக் கருதிமாத்திரம் வேறுபடலாகாது. ஐக்கியபத்தியம் பலிதமாகும்படி அற்ப வேறுபாடுகளை விட்டுவிட இஷ்டங்கொள்ளவேண்டும். எவ்வளவுசாக்கிரதையாய் யோசித்து அபிப்பிராயங் கொள்ளுகிறீர்களோ, யோசனையும் அனுபவமு முள்ளவர்களுக்கு எவ்வளவு மரியாதை செய்கிறீர்களோ அவ்வளவும் வேறுபடுதற்குரிய முகாந்தரங்கள் குறையும். ஒருசங்கத்திலுள்ள உத்தமர்கள் சொல்லைக்கேட்டு அந்தச் சங்கத்தார் நடப்பதற்கேற்ற அளவாக அந்தச்சங்கம் முன்னுக்குவருமென்று ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

———o———

வியவசாயரசாயனம்.

———o———

சாதாரணமாக நம்மவர்கள் உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் பஞ்சபூதங்களின் விகாரமென்று சொல்லுவார்கள். பஞ்சபூதங்களாவன பிருதிவி, அப்பு, வாயு, தேஜஸ், ஆகாயம். பிருதிவிஎன்றால் மண், அப்பு ஜலம், வாயு காற்று, தேஜஸ் நெருப்பு, ஆகாயமென்பதைப் பிரகிருதவிஷயத்தின்பொருட்டு ஒரு தனியான பொருளாக நினைக்கவேண்டியதில்லை. இஃது நமது உணர்ச்சிக்கும் புலப்படாத அதிநுட்பமான காற்றை யொக்குமென்பார்கள். ஆயினும் பொருள்கள் இதனால் விகாரப்படுவதில்லையாதலால், மற்ற நான்கு பொருள்களும் தனியாகவாவது விகாரப்பட்டாவது வீற்றிருக்க இடமாயிருக்கும் ஓர் வெளியே ஆகாயமென்று கொள்வோம். ஒரு சுவரைத் தோண்டினால் தோண்டியெடுக்கப்பட்ட அம்மண்ணிருந்தவிடமே ஆகாயம். ஆனால் மண்தோண்டப்பட்ட உடனே அங்கு காற்று நுழைந்து பரவும். இங்கு ஒரு வஸ்துவில்லாதவிடம் கிடையாது. இதை தந்திரத்தால்தான் உண்டாக்கவேண்டும். ஒரு பீச்சாங்குழலைக் கொண்டுவந்து அதன் இழுப்புக்குச்சியாகிய மேல்மூடிக்குள்காற்றுக்கிடங்கொடாதபடி துணிசுற்றி அமிழ்த்தினால் அக்குழலில் உள்ள காற்றெல்லாம் அடித்துவாரத்தின்வழியாக ஓடிப்போய்விடும். அப்போது அந்தத் துவாரத்தைக் காற்றுநுழையாதபடி பந்தனஞ் செய்து பின்பு மேறபடி குச்சியை மேலுக்கிழுத்துக்கொண்டால் அக்குழலில் காற்றென்றுமில்லாத வெறறவெளி அல்லது ஆகாயமுண்டாகும். இவ்வாறு ஆகாயம் மற்ற பூதங்களுக்கிருப்பிடமாயிருப்பதேயன்றி இது தனியான பூதமல்ல. இவ்வாகாயமில்லாது உலகத்தில் யாதொரு பொருளுமிருப்பது அசாத்தியமாதலால் இதை ஒரு பூதமாக வைத்துக்கொண்டார்கள். ஆயினும் உண்மையாகவே உலகத்தில் உள்ள பொருள்யாவும் பிருதிவி, அப்பு, வாயு, தேஜஸ் என்னும் நான்குபூதங்களின் விகாரமாகவேயிருக்கின்றன. இவைகளையன்றி ஒருபொருளுமில்லை. ஆகலால் இவற்றின குணகுணங்களை செம்மையாகக் கண்டறிந்தோமாயின் சகல பொருள்களின் உற்பத்திலய வேறுபாடுகளை எளிதில் கண்டறியலாம்.

தன்னில் தனியாகி கலப்பல்லாததாய் இதர பொருளாகப் பிரிக்கக்கூடாததாய் இதரபொருள் உண்டாவதற்கு ஒரு மூல காரணமாயாவதே பூதமென்றுசொல்லப்படும். இப்பூதங்கள் தனியாகவும் பிரத்தியேகமாகவும் பெரும்பாலும் காணப்படுகிறதில்லை. இரண்டல்லது பலகலந்தேயிருக்கும். சாதாரணமாக பூதங்களென்று சொல்லப்பட்ட பிருதிவி, அப்பு, வாயு, தேஜஸ் இவைகள் நிஜமாகவே பூதங்களல்ல. இவைகளெல்லாம கலப்பு வஸ்துக்கள்தான். மண்ணில் அனேகபொருள்கள் அமைந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் ரசாயனசாஸ்திரிகள் வெவ்வேறாகப் பிரித்துக் காட்டமாட்டுவார்கள். இவ்வாறே ஜலமுதலியவும் வேறுவேறாகப் பிரிக்கக்கூடிய மற்றபொருள்களின் கலப்பாலுண்டாகின்றன. ஆயினும் வேறு பொருளகளாக பிரிக்கக்கூடாதனவாயும் தம்மில்தாமே விகாரப்படமாட்டாதனவாயும் சிலவஸ்துக்களிருக்கின்றன. இவைகள்தான் பூதங்களென்று சொல்லப்படும். உலகத்திலுள்ள எவ்விதப் பொருள்களையும் நுட்பமாக பரிசோதித்தறிந்த இரசாயனசாஸ்திரிகள் மேற்கண்டபடி பிரிக்கக்கூடாதனவாயும் தன்னில் தனியாகி மற்றபொருள்கள் யாவற்றிற்கு மூலகாரணமாயிருக்கிற பூதங்கள் 67 இதுவரையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளின் குணங்களெல்லாம் இரசாயன கிரந்தத்தில் விஸ்தாரமாக சொல்லப்படும். இரசாயனத்தைப்பற்றி நாம் பிரத்தியேகமாய் எழுதக் கருதியிருப்பதால் இங்கு அவைகளையெல்லாம் சொல்லுவது அவசியமன்று. கந்தமூலாதிகள் உத்பத்தியாவதற்குக் காரணமாயிருக்கும் பூதங்களைமாத்திரம் அடியில் விவரித்துக் காட்டுவோம.

காட்டில் தாமாய் விளைகின்றனவும் நாட்டில் பயிரிடப்படுகின்றனவும் ஆன எல்லாக் கந்தமூலாதிகளில் அமைந்திருக்கும் பூதங்கள், கஅ. அவைகளாவன, ஜீவிமூலம், ஜலமூலம், நிர்ஜீவமூலம், கரிமூலம், சுத்தகந்தகம், காடிக்காரமூலம், இலவணமூலம், லவணத்திப்பி, பிளோரயின், ஸ்படிகமூலம், காரமூலம், இலவணகாரம், சுண்ணமூலம், காந்தக்கல், படிகாரமூலம், அயம், காந்தத்போலியேயாம். இப்பதினெட்டு பூதங்களுள் முதற்கூறப்பட்ட பதினொன்றும் லோகதாதுக்களை அடக்காதபடியால் லோகசூன்னியங்களெனப்படும். பின் கூறப்பட்ட ஏழும்சிலலோகங்களுக்கு ஆதாரமாயிருப்பதால் லோககாரிகளெனப்படும். (இன்னும்வரும்.)

த—ணி.

கடைதிறப்பு.

(ஜோசெப் சைம்ஸ் அவர்களால் எழுதப்பட்டது.)
(54-வது பக்கத்தொடர்ச்சி.)

II. ஆனால் வேறே முக்கியமான விஷயமொன்றிருக்கிறது. அநேக தலைமுறைகளுக்கு முந்தி பூமிக்கும் சூரியனுக்கும் உறவு சம்பந்தமுண்டாயிருந்ததென்று அனுமானிக்கப்பட்டிருந்தது. விசேஷ மகிமையுள்ள மேனியாய, மற்றெல்லா ஒளிகளும் அதற்கெதிரில் தலைகாட்டினபோது மழுங்கிப்போகச் செய்யத்தக்க பிரகாசமுடையதாயிருக்கிற சூரியன்உண்மையிலேயாது? அது என்ன? சூரியனானது அக்கினியின்பேரிலில்லாமல், அதிக ஊஷ்ணமாயிருக்கிற வெகு காத்திரமான பூமியாயிருக்கிறது. இப்போது சூரியன் பிரகாசிப்பதுபோலவே, பூமியும் ஊஷ்ணமடங்கிக் குளிர்ந்துபோகிறவரையில் அநேககோடி வருஷகாலம் ஜொலித்துக்கொண்டிருந்தது. பூமியானது ஓர்காலத்தில் பெரிய சூரியனைச் சுற்றி ஓடுகிற சிறிய சூரியனாயிருந்தது. பூமியானது தனது பருவத்தை யொழித்த சூரியனாகவும் அவிந்துபோன விளக்காகவுமிருந்துகொண்டு, ஜீவராசிகள் வாழ்வதற்கிடமான பொருளாயிற்று; சூரியன் இன்னும் அப்படிப்பட்ட தெசைக்கு வரவில்லை. சில தலைமுறைக்குமுன்னே சூரியனுக்கும் பூமிக்கும் நெருங்கிய உறவு இருந்ததென்கிற கருத்து யூகையாகமாத்திரமிருந்தது; ஆனால் அது இப்போது நிச்சயப்பட்டது. அதுமுதல் ஸ்பெக்திரஸ்கோப் என்னுங் கண்ணாடிக்கருவி உண்டுபண்ணப்பட்டது, பதார்த்தங்களிலுள்ள தத்துவங்களை வகுத்தறியத்தக்க நூதனமான ரசாயனசாகை ஏற்படுத்தப்பட்டது, சூரியனில் கலப்புற்றிருப்பவற்றைக் குறித்து நாம் இப்போது கொஞ்சந் தெரிந்துகொள்ளுகிறோம், ரசாயனக்காரர்களுடைய தொழிற்சாலைகளிலே மிகவும் நன்றாய் அறிந்திருக்கிற தாதுக்களில் (மூலப்பிரகிருதிப்பொருள்களில்) அநேகம் காத்திரமான உருவாகிய சூரியனில் காணுகிறோம்!-ஸோடியம், இரும்பு செம்பு, நாகம், கல்சியம், கிரோமியம், நிக்கெல், காந்தமண், பாரியம், ஸ்திராண்டியம், காட்மியம், ஆக்சிஜன் ஹைத்ரோஜன் என்னும் வாயுக்கள், ஆகிய தாதுக்கள் சூரியனில்விஸ்தாரமிருக்கிறதென்று கண்டறியப்பட்டிருக்கிறது. ஆகையால் சூரியன் (மனித உற்பத்தியாகி) மானிடர் வாழத்தக்க ஸ்தானமாகும்படி போதுமானமட்டில் குளிர்ந்துபோமாகில், அவர்களுக்கு பூமியிலுள்ளாருக்குண்டாயிருப்பது போலவே நாகரீகம் உண்டாகக்கூடும், நாமறிந்திருக்கிற அநேக வஸ்துக்களைப்போன்ற வஸ்துக்களை அவர்கள் செய்தாலும் செய்யலாம். இதனாலே அங்கஜீவ தத்துவங்களை ஆராய்ந்த சாஸ்திரிகள் (வெகு சிரேஷ்டமாக மதிக்கப்பட்டிருந்த) மானிட ஜன்மத்தைக் குறைவாக(மிருகத்தன்மைக்கு)கொண்டுவந்து விளங்கக்காட்டிய நிலைமைக்கே, (வெகுமகிமையுள்ளதாகப் பாராட்டப்பட்ட) பொய்யான நிலையிலிருந்து சூரியனும் உள்ளபடிக் கிட்டத்தட்ட இறங்கிவிடவேண்டியதுதான், மனிதனும் மற்றப் பிராணிகளும் முக்கியமானவற்றில் ஒரு விதந்தானென்றும், பலவிதமான ஊன்களிலுண்டாயிருக்கிற பேதங்களைக்குறித்துப் பால் என்பவர் உளறியிருக்கிறாரென்றும் நாம் இப்போது அறிந்துகொள்ளுகிறோம். அப்படியே, சூரியனுககு இயற்கையாய் உரித்தானதெதுவோ அதைமாத்திரம் அதற்குவிட்டு, அதைப்பற்றி அபத்தமாய்க் கூறப்பட்டிருக்கிற மகிமையை வானசாஸ்திரிகள் சுத்தமாய் ஹதஞ்செய்துவிட்டார்கள்; நிச்சயமாய் அதுவே போதுமானது.

சூரியனைப்பற்றி உண்மையாய் என்னசொல்லியிருக்கிறதோ அதுவே வெகுவாய் நட்சத்திரங்களைப்பற்றியும். அவைகள் நமக்கு வெகுதூரத்திலிருக்கிற சூரியர்கள்தான்; அவை காத்திரத்திலும் ஒளியிலும் நமது சூரியனுக்கு வெகுவாய் மிஞ்சியிருந்தபோதிலும், அவை தொலைதூரததிலிருக்கிறபடியால், வெளிச்சமான புள்ளிகளாகத் தோன்றுகின்றன. நிலையான நட்சத்திரங்களி லநேகம் ஸ்பெக்திரஸ்கோப் கண்ணாடிக்கருவிமூலமாய்ப் பரிசோதிக்கப்பட்டன; பூமியில் என்னென்ன ரசாயன தாதுக்கள் சேர்ந்திருக்கின்றனவோ அவைகளே ஏறக்குறைய அந்த நட்சத்திரங்களில் சேர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. நிபியூலே நட்சத்திரமும் வால்நட்சத்திரங்களும் அவ்வாறுதான்; இவ்விதமாய் பிரபஞ்சம் ஒரேதன்மையதாயிருக்கிறதென்று வானசாஸ்திரத்தினால் தெரியவருகிறது. நாம் யார் சொல்வதை நம்பலாம்? அறிந்துகொள்வதற்கு வெறுங்காட்சியும் கடவுள் காதில் ஊதினாரென்பதுந்தவிர வேறுவகை தெரியாதவர்களாய், விரிவான மனோராச்சியத்திலே தங்களுக்கென்று சிருஷ்டி செய்துகொண்ட (மேல்) உலகத்தில் நம்பிக்கைவைத்து, இத்தன்மையதென்று தாங்கள் ஒருபோதுமறியாத இவ்வுலகத்தை இகழ்ச்சிசெய்த மதோன்மத்தர்களை நம்பலாமா? அல்லது நன்மைசெய்வதில் மகத்தான பொறுமையோடு தங்கள் விசாலமான புத்தியை கணிதசாஸ்திரங்களிலும் கருவிகள் கண்டுபிடிப்பதிலும் உபயோகப்படுத்தி, வானசாஸ்திரமென்னும் சிறப்புற்ற சாஸ்திரத்தை நிலைநாட்டி விர்த்தி செய்துவந்தவர்களை நம்பவேண்டியதா?

இந்த ஆச்சரியமான சாஸ்திரத்துக்கெதிரிலே, "சூரியனுடைய மகிமையும்வேறு, சந்திரனுடைய மகிமையும்வேறு" என்பதாகப் பேய்த்தனமான உளறல் எவ்வளவு பேதமையும் சிறுபிள்ளைத்தனமுமாயிருக்கின்றது! அதைச்சேர்ந்த மற்றவைகளும் அப்படியே. தீர்க்கதரிசிகளும், குருக்கள்மாரும், பூர்வக்கியானிகளும், இரட்சகர்களும், அப்போஸ்தலர்களும், பதார்த்தலட்சண தத்துவ சாஸ்தரங்களிலும், வானசாஸ்திரத்திலும் நன்றாய்த் தேர்ச்சியடைந்திருப்பார்களாகில், வெளிப்படுத்தப்பட்ட வாக்கியங்கள் உலகத்திற்கு ஆசீர்வதிக்கப்பட்டிரா; மதங்களும், வேதங்களும், தேவகற்பனையும், குருகாணிக்கையும், பயமுறுத்தலும் உண்டாகியேயிரா. பதார்த்தலட்சண தத்துவ சாஸ்திரங்கள் வைதிகத்தைத் தலைநிமிரவொட்டாமல் அடக்கிப்போட்டேயிருக்கும். அதற்குப் பதார்த்தலட்சண தத்துவசாஸ்திரங்களே நல்ல அவிழ்தம. அதிஷ்டவசாத்தாய் குருக்கள்மார்களே அந்த அவிழ்தப் பிரயோகஞ் செய்துவருகிறார்கள். அவர்களில் சிலர் வானசாஸ்திரம் வாசிக்கிறார்கள், கற்றுங்கொடுக்கிறார்கள். உண்மையானபலன் சித்திக்கவே சித்திக்கும். இப்போது அஞ்ஞானம் அரசாளுகிறவிடத்திலே உண்மையாகிய ஞானோதயம் உண்டாகவேவேண்டும். மானிடபுத்தியிலே எப்போது ஒருகால் ஞானஒளி ஊறுகிறதோ அப்போதே, எவனாவது இப்போதுசெய்வதுபோல, வெட்டவெளியிலுள்ள பிரோதக்குழியண்டை நின்றுகொண்டு, "வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு" என்பதாக பக்தியாய் வாசிப்பது கூடாமையாய்விடும். மரித்தெழுந்திருப்போம், மறுஉலகில் வாழ்வோம் எனகிற ஆபாசமான எண்ணம் எப்போது அழிந்துபோகிறதோ அப்போது மனிதர்கள் எதை நிந்திக்கும்படித தங்களை வைதிகம் தூண்டுகிறதோ அந்த பூமிக்குத் திரும்பி, அதில் வற்றாச்சமுத்திரமாயிருக்கிற களஞ்சியத்திலிருந்து கல்வியறிவுடையவர்கள் விரும்பக்கூடிய சகல நன்மைகளையும் பெறுவார்கள்,

A. M.

கண்ணிகள்.

(50-வது பக்கத்தொடர்ச்சி.)

படைப்பெல்லாநமக்காகப் படைத்துள்ளானென்றாலோ
அடைவொடதைநம்மதென்றே யன்பாகக்கூறுவண்டா. (31)
நம்பொருளையனுபவிக்க நம்மையன்றிவேறொருவர்
தம்பொருளென்றேயுரைக்கச் சமர்த்துண்டோவென்பேண்டா.
மானிடருக்காகவேதான் வஸ்துகளுண்டானதெனின் .
ஏனிதனாற்பாவமையோ எப்படிமுளைக்குமடா. (33)
என்பொருளையநுபவிக்க வெனக்கதனாற்பாவமென்றால்
என்னநியதமிது வெங்கேனுஞ்செல்லுமோடா. (34)
கூடியென்றன்மனைவியுடன் குலாவியிருப்பதையோ
நாடிநீபாவமென்றால் நானுமதைக்கேட்பனோடா. (35)
எல்லாமுநம்மதென்றா லென்மனைவிகைபிடித்தல்
பொல்லாதெனவுரைக்கப் பொருந்துமோபாரேடா. (36)
விதியாயிதையொழிகில் விபசாரக்குற்றமுண்டோ
மதியுளிதைப்புகட்டி மானத்தைக்காரோடா. (37)
இங்ஙனேபாவமெல்லா மில்லாமற்போவதற்கு
சங்கையற்றார்தம்மொழியே சான்றாகநிற்குதடா. (38)
எல்லாமுநம்மதென்றே யியம்பிவிட்டுமூடனைப்போல்
சொல்லானபாவமென்று சொல்லினதுமாரோடா. (39)
இல்லதுவும்வாரா திருப்பதுவும்போகாதாய்ச்
சொல்லுமிந்தச்சொலலுந் தோஷமோசாற்றேடா. (40)
இல்லதுவாராதெனிலோ ஈசனார்சிருஷ்டியென்ற
சொல்லினதுபொருளைச் சொல்லவுந்தான்வேணுமடா. (41)
படைப்பிற்குமுன்முகூர்த்தம் பராபரனென்செய்தனரோ
விடைவேண்டுமிந்த வினாவினுக்குப்பாரேடா. (42)
படைபபினதுகாரணத்தைப் பண்பாய்ச்சொல்லாவிடிலோ
படைப்பென்னுமப்பெயரைப் பகரலடாதென்பேண்டா. (43)
என்னபயன்கருதி யெல்லாம்படைத்தனனோ
சொன்னவருக்கேயதுதான் சோர்வடையச்செய்யுமடா. (44)
எங்கிருந்தெங்கே யெதைப்படைத்தானென்றாலோ
இங்கொன்றிதற்கியம்ப ஏலாதுபாரோடா. (45)
கர்மமெனச்சொல்லிடுவார் கர்மமதையின்னதென்று
மர்மமறச்சொல்லுமட்டும் வழக்கைவிடமாட்டேண்டா. (46)
சர்வமுமவனதென்றாற் சங்கையறுக்கர்மமுந்தான்
சர்வத்திலடங்கியுள்ள சாட்சியையும்பாரோடா. (47)
அவனதாங்கர்மமதை யனைவருக்குங்கூறிடினோ
அவனையன்றிவேறே யனுவேனுமுண்டோடா. (48)
அவனையன்றியணுவேனு மில்லையெனவுரைப்பாரேல்
இவனைக்கருமியென்றே யியம்பிடவும்போமோடா. (49)

எனைக்கருமியென்றே எள்ளளவுஞ்சொல்வதற்கு
என்னநியாயமுண்டென் றெதிர்த்துநான்நிற்பனடா. (50)
கர்மமெனக்கில்லையென்ற காரணத்தாலையையோ
சர்வத்திற்கிவ்விதியைச் சாற்றுவேன்பாரேடா. (51)
வினைக்கீடாந்தேகம் விளைந்ததெனவுரைக்கில்
வினைமுன்னோதேகமுன்னோமெய்யெதெனவினவுவண்டா. (52)
வினைதானுமுன்னதென்றே விடையீயினையையோ
வினைதானுந்தேகமின்றி விளைவதுண்டோவென்பேண்டா. (53)
டமில்லாக்காலமதிற் கர்மமுந்தானுண்டென்றே
மடமைபூண்டுளறுமிந்த மடையருக்கேதுரைப்பேண்டா. (54)
தேகமிலலாக்காலமதில் திருவருளையன்றியுண்டோ
ஏகமாந்திருவருளுக் கேதுவினையென்பேண்டா. (55)
திருவருட்கேவினையிருக்கின் தீவினையாற்கட்டுண்டு
உருவாகிவந்தோமென் றுளறுதலேதுக்கேடா. (56)
நம்மாலேயொன்றுமில்லை நடந்ததெல்லாந்திருவருளால்
அம்மாபிறந்ததென வதட்டியேநிற்பனடா. (57)
அருளேயித்தேகமதை யன்பாயெடுத்ததென்றால்
அருளையன்றிதேகத்திற் கறிவுண்டோசொல்லேண்டா. (58)
அறிவற்றதேகமதை அருளுந்தானெடுப்பதுண்டோ
நெறியற்றுப்பிதற்றுமிந்த நெஞ்சினர்க்கேதோதுவண்டா. (59)
திருவருளேயான்மவன்றி தேகியெனின்மற்றென்றே
திருவருளேதிவர்த்தித் திரிஜீவனன்றேடா. (60)

(இன்னும்வரும்.)

கிருஷ்ணகிரி உண்மைவிரும்பி.

நாத்திகமெது?

ஓதஞ்சூழுலகுதன்னில் உத்தமவறிஞர்போற்றத்
தாதுவாந்தத்துவத்தைத் தகையுடன்கண்டுகொள்ளச்
சோதியாஞ்சுவக்கியானச் சுகுணர்கள்கொண்டகொள்கை
பேதமாஞ்சமயத்தோர்கள் பேசுவதென்னதேவோ.

கடவுள் உண்டென்பவருக்கும் கடவுளின்னதென்று அறியாதவருக்கும் உள்ள முக்கிய பேதமென்னவெனில்—அறியாதவும் அறியப்படாதவுமாகிய கடவுளைப்பற்றி முழுமையு மறிந்ததாக ஆத்திகர்கொள்ள, நாத்திகர்களோ, ஜனங்கள் அறியாமையால் கடவுளென்று பெயரிட்டழைக்கும் வஸ்து மனதிற்கு இன்னதென அவகாஹப்படவில்லை யென்று உண்மையாய் உரைப்பார்கள். ஏனெனில், கடவுள் ரூபத்திலும்,புத்தியிலும், ஞானத்திலும் பூரணரென்கின்ற கொள்கையால், அபூரணனாகிய மனிதன் அறிவுக்கரிதாய் அகண்டமாய் நின்ற நிறைவைக் (கடவுளை) திரிகரணங்களாலும் அவகாஹப்படுத்தல் கூடாமை. ஆத்திகர்களால் கூறும் கடவுள் என்னுஞ் சப்தம் சுவக்கியானிகள் மனதிற்குத் தெளிவாயும் விவரமாயும் அருத்தந் தரவில்லை. பொன்னைப்போல் எவ்வித சோதனையினாலேயும் சந்தேகந் தராமல் கடவுளென்னுஞ் சப்தத்திற்கு உரியபொருளின்னதென சுவக்கியானிகளின் எதிரிகள் ரூடி நியாயமாய் விவகரித்தால் அப்போது அவர்கள் ஆத்திகர் கொள்கையை நம்புகிறதற்கு யாதொரு தடையுமிராது. இப்படியிருக்கச் சுவக்கியானிகள் கடவுளில்லையென்று ஒருபோதும் உரையார். மேலும் அவர்கள் தங்கள்மனதில் இன்னதென்று அவகாஹப்படாத ஒன்றை யிலலையென்று சொல்லுதல் கூடாமையாலும், அது உண்டென்றுரைக்கும் ஒருவனுக்கே அது இன்னதென்று இவர்களுக்கு (சுயக்கியானிகளுக்கு) விரித்துரைக்க அவர்கள் புத்திக்கே அபூரணமாயிருப்பதினாலும், கடவுள் இல்லவேயில்லையென்று அஞ்ஞானிகளைப்போல ஒருக்காலும் சொல்லார் சுவக்கியானிகள். நாத்திகம் என்னும் பதத்திற்குச் சுவக்கியானிகள்கொண்ட அருத்தம் கடவுள இன்னதெனறு அறியாமை. (நாத்திகம்=ஆத்திகர்கொண்ட கடவுள் அல்லாமை.) இங்ஙனமாக சில நவீனவிவேகிகள் இவர்கள் கடவுளில்லையென்றுரைப்பார் என்பார். இனியேனு மங்ஙனங்கொள்ளாமல் உண்மையீதென உணர்வாராக.

C. A.

கடிதம்.

ஸ்ரீமான் ஏகாங்கிஸ்வாமிகள் நாராயண சமாஜவள்ளல்.

பிரம்மம் எங்குமிருப்பதால் கல்லிலில்லை யென விக்கிரக ஆராதனையைத் தியாஜிக்குமவனும், அர்ச்சாமார்க்கமொழிபதியான மார்க்கத்தைக் கேவலிக்குமவனும், சுத்த மூடனெனவும் கேவலம் மூடர்களுக்கே விக்கிரக ஆராதனையெனவும் பிரம்மமே உலகமாய்த் தேவாய் மற்றதுமாய் அனைத்துமாயதெனவும் போதமிகுந்து ஓதப்புகுந்த ஸ்வாமிகாள்:—

எங்குமிருப்பதைக் கல்லில் தேடுவானேன்? மண்ணையும் சாம்பலையும் தேம்பலையும் கழுதையையும் குதிரையையும் மற்றதையும் விடுவானேன? எங்குமுள்ளதன்மையாயின் கல்லிற்குப்பிராணப்பிரதிஷ்டைசெய்வானேன்! இதுவேதவிதியோ! பேதைவிதியோ? பிராணப் பிரதிஷ்டை செய்தபின்னுயினும் பிரதிஷ்டையாலாயசெயலைப்பிரதிஷ்டையுற்றசலலில்கண்டாருண்டா? கண்டுதானோ தாசி வேசி பாண மத்தாப்புதோசைவடையிவைமுதலானதுகளால்கலலைப்பிரீதிசெய்துவருவது! இவற்றால்விக்கிரகாபிமானிகள் ஓட்டாண்டியாய் மேகாதி ரோகங்களால் துன்புற்று தர்மரணமொன்றைத் தவிர அடைவது வேறுண்டென விவேகிகள் சொல்லத்தான் நாவெடுப்பாரா! வேறுண்டெனப் புகலும் விவேகி உண்டானால் இவற்றால் (தாசிவேசிமுதலானதுகளால்) 'யாது பிரயோசனம்? புகலல் வேண்டும். விக்கிரகங்கள் எழுந்தருளியிருக்கும் கட்டடங்களில் அதி நீச்சத்துவம் உண்டெனக்கண் டுணர்ந்தும் "தீமைமற, நன்மைகடைப்பிடி" என்னும் திருவாக்கைத் தெருவாக்காக்கி, அர்ச்சையெனும் அக்கிரமத்தை அதிகரிக்கச்செய்வதும் விவேகச்செயலாமா?

பிரம்மம் உலகமாய்த் தேவாய் மற்றதாய் அனைத்துமாயதெனப் பறையடிக்கும் வேதக்கடலைவாய்மடுத்துண்ட ஸ்வாமிகாள்! உலகமென்றாலென்னை! தேவு மற்றதென்றாலென்னை! உலகமென்பது பூதபௌதிகங்களாயின் தேவு மற்றதென்பதும் எதன் பிரிவுகள்! இவையனைத்தும் பிரம்மபவுதிகங்களெனில் (ப்ரம்மம் பூதபௌதிகங்களாய்விட்டபின) ப்ரம்மமெனும்பேரோ பரவெளியாகின்றனவே! ஆகவே சுவாமிகள் வேதம் அப்படியும் ஓதும், இப்படியுமோதும்போலும்; பளா! பளா!! வியப்பினும் வியப்பு!!

பிரமத்தை உலகமாய்த் தேவாய் மற்ற சாமிகளாய் மண்ணும்பொன்னுமாய் வராகம் பெருச்சாளி கருடன் கோணக்கூத்து கோமுட்டி மெலிவு வலிவு கழுதை குதிரை நாய் நரி நண்டு நத்தை மரம் மட்டை யிவைமுதலிய உயர்வுதாழ்வுள்ளபொருள்களாய்க் கூறுபோட்டுக் கூகூவெனக் கூவிக் களித்து எக்கூறு எக்கூறை வணங்க, எக்கூறு விக்கிரகமாகவும் பிர்ம்மமாகவும் இருக்கிறது! வராகம் ரிஷபமான கூறெது? கழுதை குதிரையான கூறெது? மண்ணு கல்லு ஆன கூறெது? கிருஷ்ணனாய் கோபிகளாய் இராமனாய் இராட்சதனாய் ஆனகூறெது? நாமக்கூறெது? சாம்பற்கூறெது? இவ்வோதலை முன்னிட்டோ சுவாமிகள் குழாங்கள் இவரை பெரியகல் (பெரியமலை) யென்றும் மற்றவர்களை சிறுகல் (சிறுமலை) யென்றும் தெருவிலும் திண்ணையிலும் படிப்பது அறியாமை! அறியாமை!!

பிரம்மகூறில் மோக்ஷ நரகமாய கூறெது? மோக்ஷத்திற்கும் நரகத்திற்கும் செல்லும் கூறெது? இப்படி அப்படியெனச் சொல்லுவதும் செய்வதும் எக்கூறு? இன்னோரன்னவைகளை ஓதியது வேதவிதியோ தம்விதியோ! பிர்ம்மம் உலகமாய்த் தேவாய் மற்ற கழுதை குதிரை மண்ணும் சாணமுமாகாமுன் எங்கே என்னமாயிருந்தது! இவைமுதலானவற்றால் வேதக்கடலையும் புராணக்கடலையும் பூவாய்ப்பொங்கி வழியும் ஸ்வாமிகள் விக்கிரகத்தை ஓதவந்து விக்கினமாக்கி மோதியும், பிரம்மத்தை நாட்ட வந்து பங்குகளாக்கி நாஸ்தி செய்தும் விடத்தானா பிரசங்கி நாமமிட்டு வெளிவந்தது? பாவம்! பாவம்!! ஐயோ பாவம், உபதேசம் செய்யவென வெளிவந்தது கல்லைக் காற்றில்விட்டு பிரம்மத்தைப் பாழாக்கிப் படுசூரணித்து, பிரம்மஹத்தி பாவத்திற்குள்ளாவானேன்! ஐயம் திரிபறக் கற்ற விஞ்ஞானபானுக்கள் "கேழ்வரகில் நெய் வடிகின்றதென நீ சொன்னாலுங் கேட்போருக்கு மதியில்லாமற்போமா"! என வாழ்த்துவார்களா அல்லது தாழ்த்துவார்களா? இச்சாமிகளும் இவர்போன்றோரும் ஆத்திகரா, ஆத்திகநாத்திகரா, சுத்த நாத்திகரா? இவரும் இவர்போன்றோருமே ஏகாந்தத்தில் சிந்தித் தடங்குவது நன்று. இத்தகைய ஸ்வாமிகள்இன்னோரன்ன ஆபாசங்களையெடுத்துக்காட்டுமவர்களைநாத்திகரெனவும் ஆத்திகநாத்திகரெனவும் கவனமின்றி சொல்வதை செவிமடுக்கும் நண்பர் சிரிப்பது எத்தாலோ! இப்பிரசங்கத்தால் நாராயண சமாஜம் சமாதியாயினமையைக் கண்டு, ஓட்டோட்டமாயோடிக் கூகூவெனக்கூவி (யுக்த்தி அனுபவத்துக்கு முற்றுமே முரணான) வேதமெனும் பேதத்தைவிட்டுய்மின் ,விட்டுய்மின்.

இராயப்பேட்டை நேசன்.

வர்த்தமானசங்கிரகம்.

கில்ஜைதேசத்திலே கலகத்தைக்குறித்து நிகழுமீ 1௳ முதற்கொண்டு ஒன்றும் கேள்விப்படவில்லையென்றும், ஆனல் காஜ்னியில் குழப்பமூண்டாகுமென்று அங்குள்ளார் சொல்லிக் கொள்ளுகிறார்களென்றும் பயனீர்பத்திரிகைகூறுகின்றது.

இங்கிலாந்துதேவாலய காரியங்களுக்காகச் சென்ற இருபத்தைந்து வருஷகாலத்திலே [illegible]ங்களால்இஷ்டமாய்க்கொடுக்கப்பட்ட எண்பத்தெ[illegible]றரைகோடி

ரூபாய்க்குக்குறையாமல செலவிடப்பட்டது. அத்தொகையில் பூர்த்தியான படிப்புக்காக இருபத்திரண்டுகோடிரூபாய் உபயோகிக்கப்பட்டது.

கிரிஸ்தவனான சீனதேசத்தானொருவன் நவீனகலகத்திலே சம்பந்தப்பட்டிருந்ததற்காக ஜீகியுன்மாகாணத்து கவர்னரவர்களுடைய உத்தரவினால் சென்ற ஜனவரிமீ 31உ தலைவெட்டுண்டு, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக எல்லாரும்பார்க்கும்படி அந்ததலை ஒருஸ்தம்பத்தில்கட்டித் தொங்கவிடப்பட்டது.

ஹாங்காங்கில் P. & O. கம்பெனியாரால் கையாளப்பட்டிருந்த இடத்தையும் கட்டடங்களையும் புதிதாகமத்தியமார்க்கட்டுக்கட்டுவதற்கென்றே ஆறுலட்சம்ரூபாய்க்கு துரைத்தனத்தார் வாங்கியிருக்கிறார்கள். அந்தகம்பெனியார் அந்தப்பட்டணமத்திக்குச் சமீபமாய்ப்புதுஆபீசுகள் கட்டப்போகிறார்கள்.

டான்கிவின்பட்டணத்திலே பிரான்சியர்களுடைய வியாபாரம் சீராய்நடப்பதற்குத் தடையொன்றிருக்கிறது. அந்த சாதி வர்த்தகர்களுக்குத் தேசபாஷைகள்தெரியாமையினாலே துபாசிகளைநம்பி விடவேண்டியிருக்கிறது. [தேசபாஷைகளில கொஞ்சமாவது பயின்றிருப்பதுநலம்.]

ஹைபாங்அபிவிர்த்திச்சங்கமென்னும் பேரால் ஒருகூட்டத்தார் டான்கினிலுள்ள கைத்தொழில்களைப்பரவச்செய்வதற்காகவும், அமெரிக்காவிலுற்பத்தியாகிறவைகளை நுழைப்பதற்காகவும் பெருந்தொகை முதற்பணமாகவைத்து ஹைபாங்கில் வேலைநடத்தஏற்பட்டிருக்கிறார்கள். இந்தமுதற்பணம் முக்கியமாய் அமெரிக்கர்களுதே. நீராவிஎந்திர வாள் சாலை யேற்படுத்தவும், மிஸிஸிபி நதியிலிருப்பவைகள்போல ஒருபெரியநதிஸ்டீமர்செய்யவும் உத்தேசம். [யோக்கியதையும் நம்பிக்கையுமில்லாத தேசத்தில் இப்படிப்பட்டசங்கமேது,இவ்விதகாரியம் ஏன்நடக்கும்!]

போர்ட்டிகீசாரைச்சேர்ந்த டைமர் பட்டணத்திலே நிலையாயிருக்கிற சுதேசசேனைக்குள் கலகம்நேரிட்டதாம். கவர்னரவர்களுக்காக அவருடையமாளிகைக்குச்சமீபத்திலே பதுங்கியிருந்த சிலசிபாய்கள் அவரைக்கொலைசெய்துபோட்டார்கள்; அனேக ஆபீசர்களைக் காயப்படுத்தினார்கள். யூரோப்பியன் சோல்ஜர்கள் அவ்விடத்திலருமையாயிருப்பதால், கலகம்கொஞ்சம் மும்முரமாகலாம்.

ஜபானில்இப்போதிய கணக்கின்படி சென்ற வருஷத்தில விஷபேதிகண்டவர்கள் 150,000; மூன்றி லிரண்டுபங்கு சேதம். ஓசாக்காநாட்டிலே பேதிகண்டவர்கள் 20,000 பேரில் இறந்தவர்கள் 15,000. தாயமாவிலே 16000 பேரில் மாண்டவர்கள் 10,000. மற்றதுக்குடிகளிலே தொகைகுறைவாயிருந்தபோதிலும்; அந்தவியாதிகண்டவர்கள்தொகையும் அதனால் மாண்டவர்கள்தொகையும்மேற்கண்ட அளவினதாகவேயிருக்கிறது.

பெக்கின்பட்டணத்திலே பிபர்வரிமீ 16உ சீனதேசத்துச்சக்கரவர்த்திநேமனமாகிப் பட்டங்கட்டினார்கள். இராஜஅரமனைக்குவெளியில் விசேஷசடங்குஒன்றும்நடக்கவில்லை. உள்ளேநடந்ததைக்குறித்துக் கேள்விப்படாதவர்களுக்கு இப்படிப்பட்ட முக்கியமானகாரியம் நிறைவேறியதென்று தெரியமாட்டாது. முந்தியசக்கரவர்த்தினியாருக்கு ராச்சியத்தைத்தாங்கும்பார மொழியாமல், ராசகாரியநிர்வாகத்தில் சக்கரவர்த்திக்கு இன்னும் துணைபுரிந்து வருவாரென்றுசொல்லலாம்.

பர்மாவிலே கஷ்ட நிஷ்டூரமான காலங் கழிந்த பின்பு, ஜனங்கள் சீரான வாழ்க்கையடைந்துவருகிறார்கள். வர்த்தகம் நிலையாய் விர்த்தியாகிவருகிறது. அப்பர் பர்மாவிலே சிறு கலகங்களுண்டு, அது வரவுசெலவல்ல. அந்த நாடு சென்ற அநேக வருஷங்களிலிருந்ததைப் பார்க்கிலும் இப்போது மிகுதியாய் அமர்ந்திருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டானது தன்னுடைய எல்லைக்கப்பாலுள்ள பிராணனுக்கும் சொத்துக்கும் உத்தரவாதியல்ல. பர்மாவானது இந்தியாவோடு சேர்ததுக்கொள்ளப்பட்ட ஒரு வருஷத்துக்குள்ளே வர்த்தகம் தற்கால நிலைக்கு வந்திருக்கிறது. அப்பர் பர்மாவிலும் விர்த்தியில்லாமற் போகவில்லை.

திருவாங்கூர் அசழியிலே சென்ற திங்கட்கிழமை பகல் 2 மணிக்கு துணிச்சலான கொள்ளை யடிக்கப்பட்டது. குவிலோனிலிருந்து இரண்டு பேர் 38 பாரம கொப்பரை கொண்டுவந்து 2000 ரூபாய்க்கு விற்று ஊருக்குத் திரும்பிப் போகையில், சில திருடர்கள் இலக்குவைத்திருந்து முஸ்திதுடனே ஒருபடகிலேறிப் பின்தொடர்ந்தார்கள். அவர்களில் தலைவன் போலீஸ் இன்ஸ்பெக்டர் உடுப்புப்போட்டுக்கொண்டான். பக்குவமான இடத்திலே வர்த்தகரதுபடகைமடக்கி அதிலேறி, திருட்டுசரக்கு ஏதாவதிருக்கிறதாவென்று இன்ஸ்பெக்டர் சோதனைபோடுகிறபாவனையாக சோதனைபோட்டுப் பணப்பெட்டியை எடுத்துக் கொண்டு தங்கள்படகேறி ஓட்டம்பிடித்தார்கள். பொருளிழந்தவர்கள் அலறிக் கூச்சல்போட்டும் தாமசமாய் சகாயம் கிடைத்தபடியால், திருடர்கள் அகப்படவில்லை. போலீசார் விசாரணையும் பிரயோசனமற்றதாயிற்று.

அறிக்கை.

நமது மெம்பர்களும கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தீன்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிருமபினால்,அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச

தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

கையொப்பநேயருக்கு.

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3— 0—0

வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.	
மாசம்	1-க்கு	0	4	0	முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள
ஷை	3-க்கு	0	10	0	
ஷை	6-க்கு	1	2	0	

வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.